Tai, Pol
433

தந்தை நினைவஞ்சலி



EVELYN RUTNAM LIBRARY JAFFNA
48/19

HOMAGE TO THANTHAI

LIBERTY

"Those who would give up essential liberty to purchase a little temporary safety deserve neither liberty nor safety"

"Thanthai" in Tamil means "The Father"

தந்தைக்கு அஞ்சலி

ஈழம்வாழ் தமிழ்இனம் தன்நாட்டின உணர்வை வளர்ப்பதிலும் தனது தனித்துவத்தையும் அரசியல் ஆளுமையையும் பேணிக்காப்பதில் உறுதி பூணச் செய்வதிலும் தந்தை செல்வா ஆற்றிய பணியை மிஞ்சும் முறையில் எவரும் பணியாற்றியதில்லை. இந்நூற்றாண்டு முதன்மைவாய்ந்த நூற்றாண்டாக விளங்குகின்றது. அண்ணல் காந்தி அடிகளின் வழிநடத்தலில் விழிப்புற்ற இந்தியாவை அடுத்து, கண்டங்கள் அனைத்திலும் விடுதலை இயக்கங்கள் விரைந்து செயற்படுகின்றன. அத்துடன் குடியேற்ற நாடுகளில் வாழும் மக்கள் தம் ஆன்மாவைப் பேசவைக்கும் முறையில் தம்மை மீண்டும் உணர்கின்ற நிலை உருவாகியுள்ளது. தந்தை செல்வாவென மிகப்பற்றோடும் பாசத்துடனும் அழைக்கப்பட்ட செல்வநாயகம் அவர்களும் காந்தி அடிகள்போல், தமிழ் ஈழவிடுதலை காண வலியுறுத்திக் கையாண்ட வழிமுறைகள் உண்மை கடைப்பிடித்தலும், அறவழிப் போராட்டமுமேயாகும். இவை அவரின் விலைமதித்தற்கரிய பங்களிப்புக்களாகும்.

தந்தை அவர்களின் நினைவுக் கோவில் திறக்கப்படும் மூன்றாம் நினைவாண்டாகிய இவ்வாண்டில் அவர் மறைந்தபோது அவருக்கு இந்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருந்த பெருமக்கள் செலுத்திய அஞ்சலிகளில் தெரிந்தெடுத்த சிலவற்றையும் அவரது மணிமொழிகளையும் ஒரு நூலாகத் தொகுத்து இங்கு தருகின்றோம்.

ஈழத்தின் மிகத் தொன்மை வாய்ந்த மண்ணில் பொருள் பொதிந்த முறையில் நடமாடிய, ஆவது அறிந்து பணியாற்றிய, சான்றாண்மை மிக்க இத்தலைவரின் சிறப்பியல்புகள் எதிர்காலத்தில் வாழும் எம் வழித்தோன்றல்களுக்கு எழுச்சியை ஊட்டுவதோடு அவர் வகுத்த வழியில் செல்வதற்கும் துணைநிற்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

— மலர்க்குழு.

Foreword

It was Mr. S. J. V. Chelvanayakam, more than any other, who helped the Tamils of Eelam to develop their national consciousness, kindling their will to cherish their identity and political personality. And this in the great age when following the Mahatma Gandhi-led Indian awakening, liberation movements are sweeping the continents and erstwhile colonial peoples are re-discovering, so to speak, their own soul. A no less priceless contribution of Thanthai Chelva as Chelvanayakam was affectionately called, was to insist, like the Mahatma on Truth and Ahimsa as the sole means of the Eelam liberation struggle.

On this third anniversary of his death, and the opening of the Chelvanayakam Memorial, we present a selection of the tributes so spontaneously paid to the late leader by representative men and women, here and abroad.

Generations to come will, we trust, be inspired by the prophetic leader and follow in the footsteps of one who so meaningfully trod Eelam's ancient soil.

தந்தைசொல் மந்திரம்

சுதந்திரம் வேறொருவர் கொடுப்பதல்ல நாம் அடையவேண்டும்

சுதந்திரம் வேறொருவர் கொடுக்கப் பெற்றுக் கொள்ளும் பொருளல்ல. அது சுக்கும் அல்ல, மிளகுமல்ல. மக்களின் வீரத்தாலும் தியாகத்தாலும் விடா முயற்சியாலும் மக்கள் அடையும் ஓர் உன்னத நிலைதான் சுதந்திரம். உலக சரித்திரத்தை எடுத்துப்பார்த்தால், சுதந்திரப் போராட்டம் நடத்திய எவ்வினமும் பலவீனமான இனமாகவே இருந்தது என்பது புலப்படும். பலங்குறைந்த நேரத்தில்தானே ஓர் இனம் தன் சுதந்திரத்தை இழப்பது? அவ்விதம் இழந்த இனம் தன் பலவீனத்தைப் பாராட்டிக் கொண்டு சுயாதீனப் போராட்டத்தில் இறங்காமல் நிற்குமாயின் விடுதலை எப்போ அடையும்? விடுதலை அடைந்த ஒவ்வொரு இனத்தின் சரித்திரத்தையும் ஆராய்ந்தால், அவ்வினம் தன் மனோதிடத்தினாலேயே வெற்றி அடைந்தது.

அடிமைத்தனத்தில் இருக்கும் மக்கள் சுதந்திரத்தை அடைவதற்கு, இரு அம்சங்கள் ஒன்றாக அமையவேண்டும். ஒன்று அம்மக்களின் சுயாதீன வேட்கைப் பெருக்கமும் அதற்காகச் செய்யும் முயற்சியும். மற்றது, உலக நடவடிக்கைகளால் வந்தேற்படும் சந்தர்ப்பம். கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டாகச் சுதந்திரப் போர் நடத்திக்கொண்டு இருந்த இந்தியாவிற்கு, இரண்டாவது மகாயுத்தம் முடிவடையும் காலமே சுதந்திரத்தைப் பெறுவதற்கு ஏற்ற சந்தர்ப்பமானது. எமக்கும் சுயாதீனம் அடைவதற்கு சந்தர்ப்பம் வந்துசேரும். அச்சமயத்தை வெற்றித்தினமாக்குவதற்கு நாம் முழு ஆயத்தமாக இருக்கவேண்டும். சுதந்திரம் வேறொருவர் கொடுப்பார் அல்லது வானத்திலிருந்து விழும் என்று காத்திருப்பது தவறு. நாம் அதற்காக உழைப்பவர்களாக இருக்கவேண்டும்.

—திருமலையில், தமிழரசுக்கட்சியின் 1 ஆம் மாநாட்டில், 1951-04-14.

வாராது வந்த மாமணி!

பல நூற்றாண்டுகள் இடைவெளிக்குப்பின்தான் 'பெரியவர்'போன்ற ஒரு தலைவர் எம் இனத்திடையே தோன்றமுடியும். அத்தகைய ஒருவரின் அன்பைப்பெற்று அவரோடு சேர்ந்து, நான் பிறந்த இனத்திற்காக உழைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

— மு திருச்செல்வம், கியூ.சி.

THANTHAI CHELVA'S FINAL TESTAMENT

We started the Federal movement at one time to obtain the lost rights of the Tamil speaking people and now we have found that through federalism we cannot achieve our objective. In view of this experience we have come to the conclusion that we must separate and if we do not do that the Tamil speaking people will never be able to get back their lost rights.

Our ancient people were wise. They had their own kingdom. In the history of Ceylon we had a place. We are not asking for a division of the country by our movement but we are only trying to regain what we have lost.

Our party is today moving with the idea of establishing a separate state. It is not an easy matter to get a separate state. It is a difficult matter. We know that it is difficult. But either we get out of the power of the Sinhalese masses or we perish. That is certain. Therefore we will try and get this separation. We have abandoned the demand for a federal constitution. Our movement will be all non-violent.

—Hansard, 19-11-76

HE DIED LIKE MOSES HIMSELF WITHOUT REACHING THE PROMISED LAND



"He died like Moses himself, without reaching the promised land, but the vision he saw, he leaves behind as the heritage and challenge to his people.................."—

—Rt.Revd. D.J. Ambalavanar.

தந்தைமேலாணை தமிழீழம் அமைப்போம்!

செயலாளர் நாயகம் 'அமிர்' உறுதிமொழி

அலைகடலில் திசைதெரியாது தத்தளிக்கும் தமிழினத்திற்குக் கலங்கரை விளக்கமாக இருந்து வந்தவர் எம் தலைவர் தந்தை செல்வா. எதிர்ப்புக் கண்டு கலங்காது, தோல்விகளைக்கண்டு துவளாது உறுதியுடன் அரசியலில் எதிர்நீச்சல் போட்டவர். அரசியலில் நேர்மை, தியாகம், வீரம் இம்மூன்றுமே அவரது தனி முத்திரைகள். நேர்மையே அவரது கேடயம். அவரது நிழலில் வளர்ந்த சிறிய மரங்கள் நாம். அப்பெரிய நிழலைத் திடீரென இழந்துவிட்டதால், கொதிக்கும் வெயிலைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தவிக்கின்றோம். 'கலங்கரை விளக்கம்' அணைந்ததால் இருட்கடலிற் சிக்கித் திசைதெரியாது தவிக்கின்றோம். ஆனாலும், இந்த இருளினூடே ஓர் ஒளி தெரிகின்றது. கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த தந்தை செல்வா துருவ நட்சத்திரமாக ஜொலிக்கின்றார். அவரை நம்பிப் பின்தொடர்ந்த எங்களுக்கு இதன் ஒளி இனி வழிகாட்டும். சத்திய நெறியே அவர் வழி. அந்த வழியைப் பின்தொடர்வோம். அவரது ஆத்மா எங்களுடன் எப்போதும் நிற்கும். அவர் பொன்னுடல்மீது ஆணை.

தமிழ் ஈழத்தை அமைத்தே தீருவோம். அன்புத் தந்தையே இது சத்தியம்.

தமிழ் ஈழத்தை அமைத்தே தீருவோம்,

அன்புத் தந்தையே, இது சத்தியம்.!

தந்தைசொல் மந்திரம்.

விடுதலை நம்மைத் தேடி வராது

நாம் சும்மா இருந்தால் எமது இனம் பூண்டோடு அழிய வேண்டியதுதான். உரிமைகள் தாமாகவே வரா. விடுதலை நம்மைத் தேடிவராது. நாம் அதைத் தேடிப் போகவேண்டும். அதற்காகப் பாடுபடவேண்டும்.

சிங்கள அரசு தமிழ் பேசும் மக்களுக்கு மீண்டும் மீண்டும் தீமையே செய்து கொண்டு வருகின்றது. அதனால் தமிழ்பேசும் இனம் அரசாங்கத்துக்குத் தன் எதிர்ப்பைத் துலாம்பரமாகக் காட்டவேண்டும். விடாப்பிடியாகக் காட்டிக் கொண்டே இருக்கவேண்டும்.

—கொழும்பு, இலங்கைப் பல்கலைக் கழகத்தில், சனவரி 60.

"HE WOULD STAND BY HIS WORD":

"Mr.Chelvanayakam... was a quiet and reticent man. He spoke in simple-words. He was no orator by any standard. But I have not met anybody in my community or any other community who said that Mr. Chelvanayakam would let you down.If he said something, they would say, he would stand by his word.No remark have I heard from anybody that Mr.Chelvanayakam ever did a mean or small thing........."

—J. R. JAYEWARDENE, then Prime Minister,
speaking on the Condolence Vote in Parliament
—6th September **1977**

"CLEANLINESS OF POLITICAL LIFE" :

"Mr. Speaker Samuel James Velupillai Chelvanayakam was born in Ipoh in Malaysia in 1893. Ipoh is known in Malaysia as the cleanest city in that country. Perhaps it was in the fitness of things that Mr.Chelvanayakam's political life was marked with a cleanliness unknown in contemporary politics sometimes.......

"He entered this House in 1947...He was defeated in 1952 because, as it turns out, his views were too early for his own people. In 1972 he resigned to protest against the Constitution which he believed was unjust to his people. Mr.Chelvanayakam was a lion at the Bar when he left it. The Bar was a loser but politics was a gainer. Mr.Chelvanayakam was a lion in politics and a lion of his people when death took him away. Politically, not only the Tamil people but all the people of this country are the losers while death has been the gainer....

"In appearance he was delicate, mild in manner, meek. He spoke hardly-audibly but what he said- his voice-found resonance in thousands of Tamil hearts, and not only in Tamil hearts".

—LALITH ATHULATHMUDALI
Minister of Trade, speaking on the Condolence Vote
National State Assembly- 6th September **1977**

THE DEFENDER OF MINORITY RIGHTS:

"......Chelvanayakam did not fight for the Tamil cause alone. Whenever or wherever he found people getting unjustly treated he promptly took action to see that justice was done. For instance, in February 1976 when the Muslims who gathered in the Puttalam Mosque completely unarmed were shot down by the police causing six deaths and injuring many more, he was the only M.P. who promptly demanded from the Prime Minister Sirimavo Bandaranaike to appoint a commission to inquire into the incident......."

—DR. M. C. M. KALEEL (S. J. V. Chelvanayakam, A Tribute
published by Arul. M. Rajendran, **1978***)*

அரசியலில் நேர்மை நேர்மையில் வெற்றி

— தலைவர் மு. சிவசிதம்பரம்,

அரசியலுக்கும் நேர்மைக்கும் சம்பந்தம் இல்லை என்பது பலருடைய கருத்து. ஆனால், அரசியலில் நேர்மையைக் கடைப்பிடிக்கலாம். அப்படிக் கடைப்பிடிப்பதன் மூலம் வெற்றியைக் காணலாம் என்று காட்டியபெருமை தந்தை செல்வநாயகம் அவர்களையே சாரும்.

சபாநாயகர் அவர்களே, 1947ஆம் ஆண்டுக்கு முன் தமிழ் மக்கள் வெவ்வேறு கூறுகப் பிரிந்து இருந்தார்கள். மட்டக்களப்புத் தமிழன் என்றும், யாழ்ப்பாணத் தமிழன் என்றும், மலைநாட்டுத் தமிழன் என்றும், வன்னித் தமிழன் என்றும் பிரிந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரையும் ஒரே அணியில் திரட்டிய பெருமை செல்வநாயகம் அவர்களையே சாரும். அவர் அன்று நிலைநாட்டிய ஒற்றுமை, மாவட்ட ரீதியாக அவர் ஆக்கிய ஒற்றுமை, கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒற்றுமை தமிழர் விடுதலைக் கூட்டணியாகப் பரிணமித்தது. அதனை அமைத்த பெருமை அவரையே சாரும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் இல்லையென்று வருந்துகின்றோம். நாம் எந்த விதத்தில் கடமையாற்ற வேண்டும், முன்னேறிச் செல்ல வேண்டும் என்று நமக்கு அறிவுரை கூறவேண்டிய கட்டத்தில் அவர் இல்லை என்று வருந்துகின்றோம். ஆனல், அவர் எங்கிருந்தாலும் அவர் நமக்கு வழி காட்டுவார் என்ற நம்பிக்கை எங்களுக்குண்டு.

பாராளுமன்றத்தில், 1977-09-06.

தமிழ் ஈழம் என் காலத்தில் காண்பேன் — இது உறுதி.

என் உயிரினும் இனிய தலைவா, கடவுளுக்கு அடுத்தபடியாக நான் தொழும் தலைவா, உன்னை உயிரோவியமாய்த் தரிசித்த எனக்கு, நின் உயிரற்ற உடலைத் தரிசிக்கும் மனவலிமை இல்லாமையால் உன் கடைசி ஊர்வலத்தைக் காணயான் வரவில்லை. நின் ஒப்பற்ற உருவம் என் மனக்கண்ணில் என்றும் உயிரோவியமாய்த் திகழும். உன் இலட்சியமாகிய தமிழ் ஈழம் காண்பதுதான் இன்று முதல் என் இலட்சியம். உன் காலத்தில் காணத தமிழ் ஈழத்தை நின் அடியாளாகிய என் காலத்திலாவது காணவைப்பேன். இது உறுதி.

— செல்வி மாலினி,

தமிழ் மகளிர் பேரவை, கொழும்புக் கிளை.

(இரங்கற் பதிவேட்டிலிருந்து)

"CHELVA HAS GIVEN HIS WORD, AND.........."

His hand shivers, his voice trembles and tries to form words that finally issue after a long, painful pause.

For all these physical frailties, though, S. J. V. Chelvanayakam is known in Jaffna as the"uncrowned king of the north......"The unchallenged leader of the Ceylon Tamils (his party captured 90 percent of the 'Tamil' seats in parliament). Chelvanayakam suffers from Parkinson's disease which has sadly reduced his physical movements to robot-like gestures.

And yet on this reedy, feeble and ascetic figure depends the future of a community, which, in the recent past, has resorted to extra-legal and extra-parliamentary forms of "struggle" in order to gain redress for its "grievances". Asked to explain this paradox, Mr. Chelvanayakam's party colleagues point to other outstanding qualities of leadership: an icy, precise mind and a translucent personal integrity.

Chelvanayakam's antagonists will willingly testify to his integrity. In March 1960, on a crucial vote in Parliament, an Opposition leader told me: "Chelva has given his word, he will not let us down". Chelvanayakam kept his word, all right but often his cause has been impaired, according to his party men, because he has been too ready to accept the word of others more easily controlled or buffeted by political vicissitudes.

For Chelvanayakam is not truly a political animal. He is *l'etranger*, the lawyer-outsider and topflight Queen's Counsel who has become a politician more by accident than design......"

—*MERVYN DE SILVA*, *once Edior 'CDN' & now Editor 'Lanka Guardian'*

A GENTLEMAN IN SEARCH OF TRUTH:

".....Mr. Chelvanayakam had in the last thirty years or so, built himself into the structure of our national life. It is perhaps true to say that his departure has left bereaved not merely the members of his family but also the members of a whole community.

"Having started as a teacher he moved on to law. He started practice in the Court of Requests which has in the past provided so many lawyers an unrivalled source of experience on which to build up a successful career. When he moved on to the District Court, in due course, he became one of the leading lawyers there. He was a man of great forensic skill. He found no need to make a spectacle of the case he was appearing in for the amusement and encouragement of an uninitiated gallery. Nor was he anxious to provide headlines for the newspaper reporters. He was indeed a lawyer's lawyer. He had a deep knowledge of legal principles, analytical mind and such a command of the language as to enable him to express himself simply but forcefully and convincingly; he set for himself rigorous standards of hard work and devotion to duty.

He practised in the Courts in an age when it was the fashion to bully witnesses in cross-examination. Chelvanayakam set an example of courtesy and dignity. He was indeed the picture of a gentleman in search of truth.

"As a lawyer Mr. Chelvanayakam will be remembered and honoured as a great model for civil lawyers practicing in the highest or the lowest courts of this country. As a politician his death has been like a great tree falling. It has left his friends and supporters surprised to see how bare the landscape is without him."

—*VICTOR TENNEKOON, then Chief Justice*, 1977-05-13

உலகத் தமிழர் நெஞ்சத்தில் அணையாத தீபம்



கலைஞர் கருணாநிதியின் கண்ணீர்

படுக்கையின் ஓரத்தில் இருந்த தொலைபேசி நள்ளிரவு பன்னிரண்டு மணிஅளவில் ஒலித்தது. இலங்கையிலிருந்து வந்தது குரல். சுதந்திரன் பத்திரிகை நண்பர் மகேசன் தழுதழுத்த தொனியில் அந்த அதிர்ச்சிக்குரிய செய்தியைச் சொன்னார். செல்வா மறைந்துவிட்டார். இலங்கைத் தமிழர்களின் செல்வம் மறைந்துவிட்டது. அந்தோ! அள்ள அள்ளக் குறையாத அரும்பெரும் செல்வமாம் ஈழத்துத்தந்தையை இழந்துவிட்டோம்.

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரோடு வாழ்வை நகர்த்திக்கொண்டிருந்த இலங்கைத் தமிழர்களுக்கு இவரன்றோ போர்வாளாய் - கேடயமாய்த் திகழ்ந்தார்.

அங்கு எத்தனை அடக்குமுறைகளைத் தமிழர்கள் ஏற்கவேண்டி இருந்தது. தூண்டிவிடப்பட்ட கலவரங்கள் பலவற்றில் தூண்டில் மீன்களாய்த் தமிழ்க் குலத்தை சார்ந்த ஆடவரும் பெண்களும் அவதிப்பட்டுத் துடித்தபோது அவர்களுக்குத் துணைநின்று ''காவல் தெய்வம்'' என்ற நிலையில் அல்லவா செல்வா அவர்களின் தொய்வில்லாத் தொண்டு அமைந்திருந்தது.

பசப்புமொழிபேசி அவரைத் தம்பக்கம் இழுத்திட நினைத்தோர், பதவிச்சுகம் காட்டி அவரது பகையைத் தவிர்த்திட முனைந்தோர், அவர்கள் யாருக்கும் வணங்காத தலையினராக, வைர நெஞ்ச வேங்கையாக, கொண்டகொள்கையில் குன்றென நிமிர்ந்து நின்று இறுதி மூச்சுப்போகும் வரையில் இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வு ஒன்றையே எண்ணிக் கொண்டிருந்தார் அந்த ஈழத்துப் பெருந்தமிழர்.

மூன்று நான்கு ஆண்டுகட்கு முன்பு தமிழகம் வந்திருந்தார். எங்களை எல்லாம் சந்தித்தார். எலும்பினால்மட்டுமே உருவானதோ அந்த உடல் என வியக்கத்தக்க அளவுக்கு அவ்வளவு இளைத்திருந்தார். எனினும் இலங்கைத் தமிழர்களுக்காகப் போர் தொடுப்பதில் களைத்திருந்தார் என்று எவரும் கூறிட இயலாது. உலகெங்கும் பரந்து கிடக்கும் தமிழ்மக்களின் பாதுகாப்பு அரணாக நமது தி. மு. கழகம் இருப்பது கண்டும், அந்தத் தமிழ் மக்களின் நல்வாழ்விற்காகத் தேவைப்படும் போதெல்லாம் குரல் கொடுப்பது கண்டும், அவர் அடைந்திருந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவற்றைத் தமிழர்களின் மாணிக்கமாம் செல்வா அவர்கள் நன்றிப்பெருக்குடன் நினைவுகூர்ந்திடத் தவறியதேஇல்லை.

செல்வா மறைந்துவிட்டார் எனினும் அவரால் உருவாக்கப்பட்ட ஆற்றல் மிகு தலைவர்கள், தளபதிகள், வீரக் கவிஞர்கள், இலட்சியக் காளைகள் பலர் இருக்கிறார்கள். இலங்கைத் தமிழ்மக்களுக்காகச் செல்வா ஆற்றிய பணியை அவர் வழியில் மற்றவர்கள் தொடர்வார்கள்.

— தமிழர்களின் நல்வாழ்வுக்கு வழி அமைத்திட அவர் ஓயாதுவழங்கிய உழைப்பு, என்றென்றும் அந்தத் தியாகச் செல்வத்தை உலகத் தமிழர்களின் நெஞ்சகத்தில் அணையாத தீபமாக ஆக்கி வைத்திருக்கும் என்பது மட்டும் உறுதி.

A LEADER WHO NEVER DESPAIRED

"Chelvanayakam has sometimes been called "the Gandhi of Ceylon"; but as compared with Chelvanayakam the Mahatma had a much easier task. In the first place, his struggle was a clear-cut one; here was a country, under his leadership, fighting for its freedom against an alien power; the issue was clear and easily intelligible. Chelvanayakam's struggle was in an internal and complicated struggle; the issues were ill-defined. How far could he go and where should he stop? Secondly, though the Mahatma had to face 30-40 thousand British bayonets, he had 300 million people behind him; Chelvanayakam had only a meagre community behind, whose very right to be in this country has occasionally been questioned. Also, because of the fact that India's case was clear-cut, the Mahatma had international opinion heavily, if not overwhelmingly, on his side. Chelvanayakam's case was hardly known to the out-side world and therefore, he had no such support. It is, therefore, obvious that the Mahatma had every advantage over Chelvanayakam.

"Looked at from one point of view, Chelvanayakam's political life was one of unrelieved failure. When first he tried to explain the meaning of Federalism, he was misinterpreted and laughed at. The press (except for his own weekly paper which was merely his echo) and all other agencies of mass media were always against him. In Parliament, except for a brief period, his part consisted merely in saying "No" to everything that was brought up; and the record of Parliament, as for as its own part was concerned, consisted in saying 'No' to every proposal or amendment of Mr. Chelvanayakam. The requests he made were turned down and the agreements he tried to reach with those in power, except in one or two matters, always fell through. Yet looked at from another point of view, herein lay his success. In spite of his utter apparent failure, he never gave up. The wind had blown consistently and with almost irresistible force; but the flame had not been quenched; it had hardly flickered.

"What then was Mr. Chelvanayakam's achievement? About 450 years before the Christian era, the Carthagenian armies had invaded Italy and defeated the Romans in every battle; but Cincinatus, the Roman Dictator, would not give up. And the Roman Senate passed a resolution thanking him, because "he had not despaired of the republic". The logic was, "If he did not despair, why should we?" The Tamils of Ceylon, in like manner, looked upon this gaunt and haggard man, stricken by disease, who could hardly walk and could hardly speak above a whisper, who through a life of continued failure and disappointment, yet had not despaired; and they asked themselves, the question," If he did not despair, why should we?" This then is Chelvanayakam's achievement: that he has taught the Tamils of this country to believe in themselves."

—The Rt. Rev. S. Kulendran

(*S. J. V. Chelvanayakam, A Tribute published by Arul M. Rajandran,* 1978)



நேருவும் செல்வாவும்

NEHRU & CHELVA

சிங்களவர் மனதை மாற்ற அவர் நீண்ட முயற்சி எடுத்தார்......

திரு. செல்வநாயகம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவனத் தலைவர், தமிழர் விடுதலை முன்னணியின் கூட்டுத் தலைவர். எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் ஈடு இணையற்ற—ஒப்பாரும் மிக்காரும் அற்ற—ஒரே தலைவரும் அவரே ஆவர்.

தமிழரிடையே நிலவும் குழுக்கள் பலவற்றையும் இணைக்கும் சக்தியாக அவர் விளங்கினார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசுடன் கருத்துவேறுபாடு ஏற்பட்டுத் தமிழரசுக்கட்சியை நிறுவியதன் மூலம் 1952இல் தான் அவர் அரசியல் களத்தில் குதித்தாரென்றாலும், தமிழ்மக்கள் மீது அவர் வைத்திருந்த பிடிப்பும் — அதே வேளையில் தமிழர் அல்லாதவரிடமும் அவர் பெற்றிருந்த மதிப்பும் யாருக்கும் இளைத்ததில்லை; சளைத்ததில்லை.

தமக்குள்ள சிக்கல்களைத் தீர்க்கத் தீவிரம்மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்த தமிழ் இளைஞர்கூட, செல்வாவின் ஆலோசனையை மதித்தனர். அறப்போர் முறைகளில் அவருக்கு உள்ள முற்றான நம்பிக்கையை அந்த இளைஞர்கள் ஏற்கவில்லை. என்றாலும் அவர்கள் அவர் ஆலோசனையை மதித்தனர். அவரது அறிவுரையினால் அந்த இளைஞர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

சிங்களவர் மனத்தை மாற்ற அவர் நீண்ட முயற்சிகள் எடுத்தார். அந்த முயற்சிகள் தோற்ற பின்பே அவர் தமிழ்மக்களுக்குத் தனிநாடு கோரினார். ஆம், அவர் இந்தச் சூழ்நிலையில் தனிநாடு ஒன்றே (தமிழர் துயருக்குத் தக்க) தீர்வென்று கருதினார்.

—சென்னை, 'இந்து' ஏடு, 1977-04-28.

THEY IGNORED PROTOCOL:

When Mr. S. J. V. Chelvanayakam died, the only official or constitutional position he held in the country was that of a Member of Parliament. Protocol wise, he represented something even less, and what could be more embarassing, he was the leader of a Liberation movement within the country, a movement pledged to establish a separate state!

It is perhaps an index to the measure of the man and his national stature that both government and representatives of foreign governments chose to disregard protocol in paying homage to a man whom the then Australian High Commissioner Mr.A.Borthwick described as "one of the most remarkable and outstanding men in the public life of Sri Lanka".

Below is a selection of condolence messages from representatives of foreign governments as well as local dignitaries that included the Heads of the Armed Forces and the Inspector General of Police:-

"A VOID IMPOSSIBLE TO FILL":

"Chelvanayakam's character, wisdom and good services to all causes he espoused would ever be remembered. His death creates a void impossible to fill. We pray for everlasting peace for the noble soul".

—Gurubachan Singh,
High Commissioner for India.

"AN INFLUENCE FOR GOOD":

"I extend my sincere sympathy at the loss of a truly fine leader. He was a dedicated honest person who earned the respect and admiration not only of his own people but all who knew him. He will be greatly missed as an influence for good"

—John M. Reed
American Ambassador

"A TRULY FINE LEADER":

It is the loss of a truly fine leader and I extend my sincere sympathy on behalf of the people of Czechoslovakia"

—Ambassador of Socialist Czechoslovakia

"A REMARKABLE MAN":

"Deepest sympathy and condolence for one of the most remarkable and outstanding men in the public life of Sri Lanka"

—A. Borthwick,
Australian High Commissioner



கண்ணீர் வெள்ளத்தில் நீந்தி இறுதி அஞ்சலி செலுத்திய மக்கள் வெள்ளத்தில் ஒரு துளி.

"A GREAT SON OF THIS ISLAND":

"Extremely shocked-my deepest sympathy and condolences for the bereaved family. Let his soul rest in peace. Mourning the sad demise of the great son of this Island".

—High Commissioner for Bangala Desh

"A MAN OF PEACE":

"Our deepest sympathy for the great loss of a fine leader and a man of peace and my heartfelt condolence".

—Ambassador of Egypt

"Deepest condolences on passing of Mr.Chelvanayakam and sympathies for his bereaved family":

—Muang Ming-Ta
Chinese Ambassador

"Our deepest sympathies on the great loss for the family. We hope tha God, the Almighty will give him a lasting peace for the demised leader":

—Indonesian Ambassador

"To the outstanding leader of Sri Lanka and the Tamil people":

—Ambassador of Yugoslavia

"With deepest sympathies":

—Embassy of the German Democratic Republic
First Secretary

"On behalf of the Ambassador of the Arab Republic of Egypt and the staff members of the Embassy I pay our humble tribute and homage to a great man whose loss will be greatly felt":

—Mohab Moobebel
Counsellor Embassy of Egypt.

Among other diplomatic personnel who signed the Condolence Book were the Russian Ambassador, Mr.Rafin Nishanov, the British High Commissioner Mr.David Aier, the Pakistan Ambassador Mr.Abdul Raug Khan, the High Commissioner for Canada Mr.P.S.Cooper, and the Charge'd Affaires of France Mrs. M.Drogoul.

"ஈழத் தமிழர்களின் உரிமைப் போருக்குச் செல்வாவின் ஆவி துணை நிற்கும்!"

ஈழத் தமிழர்களது ஈடு இணையற்ற தலைவரான திரு. செல்வநாயகம் அவர்கள் ஏப்பிரல் 26ஆம் திகதியன்று இரவு யாழ்ப்பாணத்தில் காலமான செய்தி கேட்டு வருந்துகின்றோம்.

இலங்கை முழுவதற்குமான ஆட்சிமொழிகளிலே ஒன்றாகத் தமிழை ஆக்குவதற்கும், தமிழ் மாநிலமும் சிங்கள மாநிலமும் கொண்ட சமஷ்டி அரசை இலங்கையிலே உருவாக்கவும் அவர் அரும்பாடுபட்டு வந்தார். அந்தப் பணி முடிவதற்கு முன்னே அவர் இயற்கை எய்திவிட்டார்.

இலங்கைத் தமிழர்களின் இதயக்கோவிலிலே அவர் இருந்து வந்தார். இது வருணனையல்ல, வரலாறு.

திரு. செல்வநாயகம் 80 வயதை அடைந்துவிட்ட முதியவர். என்றாலும், இலங்கைவாழ் தமிழ் இளைஞர்களின் நம்பிக்கைக்குரிய தலைவராகவும் விளங்கி வந்தார். சிங்களவர்களின் பிடிவாதம் காரணமாகச் சுதந்திரத் தமிழ்நாடுகோரும் இளைஞர் புரட்சிப்படை ஒன்றும் இலங்கையில் தோன்றிவிட்டது. அந்தப்படையினரும் முதுபெருந் தலைவரான செல்வாவிடம் மதிப்புவைத்திருந்தனர். உண்மையில் செல்வாவின் மறைவு ஈழத் தமிழருக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

தமிழரசுக் கழகத்திடம் கொள்கை ரீதியாக உறவுகொண்டிருந்தார், திரு. செல்வநாயகம். இந்தியத் தமிழகம் வரும்போதெல்லாம் என்னைச் சந்தித்தார். நான் ஈழத்திற்குச் செல்லும்போதெல்லாம் என்னைத் தம் இல்லத்திற்கு அழைத்து விருந்தளித்து உபசரிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டிவந்தார்.

திரு. செல்வநாயகம் அவர்களின் பிரிவானது ஈழத் தமிழர்களைத் துக்கக் கடலில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவர்களுக்கு ஆறுதல் சொல்ல வார்த்தையே இல்லை. இந்த அதிர்ச்சியிலிருந்து விடுபடுவதற்கு அவர்களுக்குச் சிறிது அவகாசம் தேவைப்படும். ஆயினும், அமரராகிவிட்ட திரு. செல்வாவின் ஆவி இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போருக்கு இனியும் துணைநிற்கும் என்பதில் ஐயமில்லை.

அமரர் செல்வாவின் ஆத்மா அமைதிபெற இறையருளைப் பிரார்த்திக்கின்றேன். அவரது பிரிவால் வருந்தும் இலங்கைத் தமிழருக்கும், அவர்களின் பிரதிநிதித்துவ அமைப்பான தமிழரசுக் கட்சிக்கும், செல்வாவின் குடும்பத்தாருக்கும் தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிலம்புச் செல்வர் மா. பொ. சி.

"SUCH A MAN IS RARE": "I offer Mrs. Chelvanayakam and the members of the family my deepest sympathy. He has commanded my admiration as an outstanding lawyer, an upright leader and a man of the highest integrity and rectitude. Such a man is rare."

—G. T. Samerawickreme, Judge of the Supreme Court

"A SINCERE CITIZEN OF SRI LANKA": "I pay my humble tribute to a sincere citizen of this country, a great and dedicated leader of the Tamil people and their rights. His loss will be mourned by every son and daughter of Sri Lanka"

—Jaya Pathirana, Judge of the Supreme Court

"A LOSS HARD TO BEAR":A loss that the Tamil community can hardly bear at this crucial juncture—*V. Siva Supramaniam,*
Former Judge of the Supreme Court,
President of the All Ceylon Hindu Congress.

"HIS STATURE WAS COLOSSAL": "Mr. S. J. V. Chelvanayakam's death is a great loss to the nation. As a man fully committed to the highest ideals of democracy he helped to bring democratic maturity and stablity into the nation's life. His stature as a leader of the Tamil community was colossal. The United Ceylonese Party mourns the death of this illustrious Tamil leader".

—Rohan L. Karunaratna,
Youth Leader.

"I STILL REMEMBER..": "I still remember the tall, slim figure, stricken with sorrow and sincere love at my husband's death bedside at Addison Road, London. I feared to think that Mr.Chelvanayakam had climbed the stairs. He was our first visitor—I convey my deepest sympathy to his family"

—Mrs. Gunasena de Soyza
(wife of the former High Commissioner for Ceylon in U. K.)

"A PAINFUL BUT IRREVOCABLE DECISION": "Mr. Chelvanayakam stood for a federal constitution for 25 years or more as the ideal solution for the multi-lingual and multi-national problems facing the Island. He pursued this policy with the sincere hope of changing the hearts of the Sinhalese leaders. After having agitated for this goal and after the repeated disappointments on talks and pacts he had with the successive Sinhala governments he came to the irrevocable decision of having a Sovereign Tamil State—Tamil Eelam State as the only solution left for the Tamils if they are to live with self-respect in this Island. This was not an easy decision. For Chelva it was a very painful decision knowing quite well the consequences that would flow from implementing it......."

—M. K. Eelaventhan,
President, T.U.L.F. Branch, Colombo.

A GREAT LOSS TO TAMIL-SPEAKING PEOPLE: The Sri Lanka Freedom Party Youth League and I convey our deepest sympathies on the loss of Mr. Chelvanayakam. His death will be a great loss to Tamil-speaking people of Sri Lanka. Please convey our deepest sympathies to members of your family.

— Anura Bandaranaike.

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்

—நாவலர் நெடுஞ்செழியன்

தமிழர் நலம் காத்த கொள்கைச் சான்றோர், ஈழத்துத் தமிழர் ஒப்பற்ற ஒரு பெருந் தலைவராய்த் திகழ்ந்து ஈழநாட்டில் காந்தியார் என்று போற்றப் பட்டு, தமிழ்ப்பெருங்குடி மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக வாழ் நாள் முழுவதும் போராடி வந்த வீரரும், முதுபெரும் சான்றோருமான செல்வநாயகம் அவர்கள் இயற்கையெய்தியதையிட்டு ஆற்றொணுத் துக்கமும் துயரும் அடைகின்றேன்.

செல்வநாயகம் அவர்களது மறைவு, உலகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழர் அனைவருக்கும் பெருந்துக்கத்தை அளிக்கக் கூடியதாகும். அவரை நான் ஈழத்திலும், தமிழ் நாட்டிலும் பலதடவை கண்டு அளவளாவி மகிழ்ந் திருக்கின்றேன். அவர் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களில் ஒருவராவர்.

அவரது மறைவு குறித்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும் ஈழநாட்டின் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலை மக்கள் தி. மு. கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழீழத்தை மீட்பதே தந்தை செல்வா வழி

—சிந்தனைச் சிற்பி சி. கதிரவேலுப்பிள்ளை பா. உ.

தமிழீழத்தை மீட்பது ஒன்றே தமிழினத்தின் மீட்சிக்குத் தந்தை செல்வா காட்டிய வழி. தமிழ் ஈழ மீட்புப் பணியில் ஈடுபடுவதே தந்தை செல்வா வின் பாதையில் செல்வதாகும். அகிம்சை முறையில் தமிழ் ஈழத்தை மீட்பதே தமிழ் மக்களுக்குத் தந்தை செல்வா இட்டுச் சென்ற ஒரே கட்டளையாகும்.

<u>தந்தை சொல் மந்திரம்</u>

எம்மை நாமே ஆள்வோம்

இலங்கைத் தமிழர் தங்களைத் தாங்களே ஆளவேண்டும். சிறிய நாடுகளுக்குச் சுயநிர்ணய உரிமை அவசியம்.

— மாவை கந்தசுவாமி ஆலயவீதியில், (1949-02-02, ஈழகேசரி)

PRAYERS ASSURED:

Deepest sympathies to family members prayers assured.

—Cardinal Cooray

Heartfelt condolences regret loss of eminent leader.

—Eelam Tamil Association—Canada

Central Province Muslim League bemoans the passing away of Mr. Chelvanayakam who has championed the cause of Communal Harmony in this country for over a half a century. Please accept our deepest sympathies.

—Zackeriya M. Razik

Please accept our sympathies at the loss of a devoted leader who sacrificed all personal comforts for peoples sake.

—Mahadevan.
President, Ceylon Association, Ipoh, Malaysia

A VOID WHICH CANNOT BE FILLED:

On behalf of the World Muslim Congress and myself please accept our deepest sympathies on death of your dear husband. His demise at this critical juncture creates a void in the political life of the community which cannot be filled. He was a leader respected by all for his sincerity of purpose and ideals. We pray that God in his mercy will grant his soul eternal rest.

—M. M. Mohamed,
President, World Muslim Congress Ceylon Council.

SINGULAR PURITY OF LIFE:

National Union of Workers grieves with you your irreparable loss. Your late partner's singular purity of life and deep concern for the well-being of minorities give him a bright chapter in our history.

—C. V. Velupillai

AN HONOURABLE LEADER:

He was an honourable and righteous leader and his demise is a great loss to the country. *—President of Sri Lanka and Mrs. Gopallawa.*

Whilst conveying deepest sympathies of the Methodist Church Sri Lanka on the sad loss, we pray and thank God for his life and work and for his witness as Christian to his creator and his children.

—Acting President, Methodist Church, Sri Lanka

FROM DUBAI: Please accept our heartfelt condolences.

—Ceylon Tamil Youths—Dubai, Emirate Housing Company.

Please accept our heartfelt condolences.

—Gnanapragasar Tamil Academy, National Seminary Ampitiya Kandy

Accept deepest condolences over death of beloved husband irreparable loss to National and Tamil Community. Regret inability to attend being hospitalised.

—D. H. Jayaratna M.P. for Gampola.

Deeply regret our leader Chelvanayakam's death. Irreparable loss to Tamil speaking community and to Sri Lanka over passing away of one of country's, illustrious statesman. May God bless his soul. *—S. A. Rahim M.P. Mannar.*

சிதறுண்டிருந்த தமிழினத்தை ஒன்றிணைத்தார்

தங்கள் அன்புக் கணவரும் சிதறுண்டிருந்த தமிழினத்தையும் தலைவர்களையும் தம் இசைவால், கடைக்கண் பார்வையால், புன்முறுவலால், எவரும் புரிந்து கொள்ள முடியாத அருட்சக்தியால் இணைத்துத் தமிழர் கூட்டணி அமைப்பிற்குள் அடக்கி, தமிழீழம் காண வழிப்படுத்தி இயக்கிக் கொண்டிருந்த தந்தை, ஈழத்துக் காந்தி என்னும் சுடர் அணைந்துவிட்ட செய்தி எம்மையெல்லாம் அதிர்ச்சியடையச் செய்து ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டது. எமது பிரார்த்தனைக் கெல்லாம் இறைவன் அரும்பார்வை கிட்டவில்லையே என்பதை எண்ணி உள்ளம் வெதும்புகின்றது. எமது கனவெல்லாம் நனவாகப் போகின்றது என்று எண்ணிப் பூரிப்படையும் வேளையில் காலன் சதி செய்துவிட்டானே.

அவர் அமரர் ஆனாலும் அவரது ஆத்ம சக்தி எம்முடனும் தமிழினத்துடனும் தலைவர்களுடனும் நின்று நல்வழி காட்டும். அவர் காட்டிய பாதையில் சென்று அவருக்கு நன்றிக்கடன் செலுத்துவோம்.

— இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

தந்தையால் தமிழ் எழுச்சி பெற்றது

மூதுபெரும் தலைவர் திருப்பெருந்திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் இவ்வுலகை நீத்தமையைக் கேட்டு மிக அதிர்ச்சி அடைந்தோம். பெருந்துயர் உற்றோம். அவர் உலக வரலாற்றில் இடம் பெறும் புகழுடைப் பெரியார். நமது நாட்டில் தமிழ் மொழிக்கு அரசியல் வகையில் நிலையான இடத்தைப் பெறுவதற்காகத் தமது வாழ்க்கை முழுவதும் உழைத்தவர். தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்தினர். அவரது பணி இந்நாட்டில் மட்டுமன்றி, உலகில் தமிழ் வழங்கும் நாடுகளில் எல்லாம் புதிய எழுச்சியை உண்டாக்கியுள்ளது. அவர் முத்தமிழிலும் மிக்க அறிவும் பற்றும் உள்ளவர். பண்பு மிக்க மூதறிஞர். பண்புடைப் பெருமை வாய்ந்த தமிழ், அவர் அயராப் பணியால் புதிய எழுச்சி பெற்றுள்ளது. அவரது பிரிவு தமிழ் பேசும் உலகிற்கு ஈடு செய்ய இயலாத பெரும் இழப்பாகும். அவரைப் பிரிந்து தாங்கொணாத் துயர் உறும் குடும்பத்தினர்க்கும், தமிழ்த் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

— கொழும்புத் தமிழ்ச் சங்கம்

AMONG OTHERS ....

Among others who signed the Book of Condolences at Mr. Chelvanayakam's residence were:-

Mr. Albert Edirisinghe, President, All Ceylon Buddhist Congress, and Secretary India-Ceylon Society; Mr. K. Manoharan, then Deputy leader, All India Anna-D.M.K.on behalf of the party and **Mr. M. G. Ramachandran** the leader; **Mr. Sam Wijesinghe,** National State Assembly; **Mr .and Mrs. Danton Obeyesekera** of Guildford Crescent, Colombo; **Mr. S. R. Wijayatilake,** earlier Judge of the Supreme Court; **Mr. M. Husain Mohamed,** M.M.C. Colombo; **P. Navaratnarajah,** Q.C.; **Bishop Oswald Gomis,** Auxiliary Bishop, Archbishop's House, Colombo; **Mr. and Mrs. A. L. Thambiayah; Mr. J.S.L. Fernando,** Headmaster, St.Thomas' Prep. School, Kollupitiya; **Mr. A.H.C. de Silva Q.C.** and Mrs.de Silva; **Mr.H.R. Fernando,** President, National Chamber of Commerce; **Mr. Abdul W. M. Ameer,** Consul for Dominican Republic and Mrs. Ameer; **Mr. Anton Muttucumaru,** former Army Commander; **Mr. Ronnie de Mel,** then M. P. Devinuwara, later Minister of Finance; **Mr. Eardley Perera,** President. Bar Association of Ceylon; on behalf of the Sri Lanka Bar; **Lady Vaithianathan; M. Rajendra; Devanesan Nesiah; Punitham Tiruchelvam; Dr. G. Wignarajah; R. Sabanayagam,** President, Vivekananda Society; **Mrs. Thangaranee Nadarajah,**President of the Colombo Branch of the Uduvil Girls Past Pupils' Association, along with other office-bearers; **C.E.P.Jaya-suriya, Prof D. Chanmugam,** Faculty of Medicine, University, Colombo; **Professor T. Nadarajah,** Faculty of Law, University of Sri Lanka; **Victor Tennekoon,** Chief Justice; **Pieter Keuneman,** General Secretary, Communist Party of Sri Lanka on behalf of the Central Committe, the party and himself; **A. F. Wijemanne,** once Minister of Justice and Mrs. Wijemanne; **Sarath Metuwegama; P. T. Sivapragasam** President, St. John's College, Jaffna, Old Boys Asssociation, South Ceylon; **K. C. Thangarajah; H. E. Tennekoon,** Governor, Central Bank of Ceylon; **Professor P. K. Chanmugam** and Mrs. Chanmugam; **D. Wimalaratne,** Judge of the Supreme Court; **Bishop Lakshman Wicremasinghe;** Bishop's House, Kurunegala; **Mr. Vincent Thamotheram,** Judge of the Supreme Court and **Mrs. Thamotheram; A. Ratnayake,** President, Mahatma Gandhi Trust, and earlier President of Senate and Minister; **Sidney de Zoysa; Mr. H. W. R. Weerasooriya,** former Judge of the Supreme Court and Mrs. Weerasooriya; **Mr. Mervyn Casie Chetty; Rev. B. C. D. Mather; Sir Sangarapillai Pararajasingham;**

HIS LOVE FOR MUSIC

"......I have been trying to recollect how he spent his leisure. I remember that he was fond of playing the violin and for some time had a tutor to give him regular lessons. Not being musical myself, I cannot say how good he was. He was interested in Carnatic music and attended recitals by visiting artistes."

—Mr. M. Rajendra (S. J. V. Chelvanayakam, A Tribute, published by Arul M. Rajandran, **1978.**)

மெலிந்த உடல், மெலிந்த குரல்

ஆனால், உறுதி குலையாத உள்ளம்

தி. மு. க. சார்பில்

ப. உ. சண்முகம்

ஈழத்துத் தமிழர்களின் இழிவினைப் போக்கிடக் காலமெல்லாம் போராடித் தமிழ் மக்களின் தந்தையெனப் பெயர்பெற்றுத் தரணியெங்கும் சிறந்து விளங்கிய தமிழ்த் தந்தையின் இறுதி யாத்திரையிற் கலந்துகொள்ள வந்தோம். ஆனால், வசதியின்மையால் இயலவில்லை. என்றாலும் அவரது இல்லம் வந்து இரங்கல் தெரிவிக்கும் வாய்ப்பைப் பெற்றோம்.

மெலிந்த உடல், மெலிந்த குரல், இருப்பினும் உறுதி குலையாத உள்ளம். தடுமாறாத நெஞ்சம். இப்பெருந் தலைவரைச் சென்னையிலே சந்தித்தோம். இதற்குள்ளாக இயற்கை அவரை நம்மிடமிருந்து பிரித்துவிடும் என்று அப்போது நாங்கள் எண்ணவில்லை.

இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு அடுக்கடுக்காய் ஏற்பட்டுவரும் சோதனைகளைக் காணும்போது அவர்தம் கண்ணீரோடு தமிழக மக்களின் சார்பில் எங்களது கண்ணீரையும் காணிக்கையாக்குகின்றோம்.

(தந்தை செல்வா இரங்கற் பதிவேடு, 1979 ஏப்பிரல் 30.)

அண்ணாவைத் தந்தை செல்வாவிற் கண்டேன்

முதலமைச்சர் எம். ஜி. ஆர். சார்பில்

நாஞ்சில் கி. மனோகரன்

ஓர் அண்ணாவை, ஒரு காமராஜரை தந்தை செல்வாவில் கண்டேன். மூதறிஞர் செல்வா சாகவில்லை. தமிழ் மக்கள் மத்தியில் என்றும் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

தந்தை செல்வா, தமிழுக்காக வாழ்ந்து தமிழினத்துக்குத் தன்னுடைய வாழ்வை அர்ப்பணித்தவர். அவர் ஒரு பெருந்தலைவர். அவர் மறைந்து விட்டார், என்று நான் கருதவில்லை. ஒவ்வொருவர் வாழ்விலும் தந்தை கலந்து விட்டார்.

எந்த நாட்டில் வாழ்ந்தாலும், எங்கள் ஒற்றுமையை அழிக்க முடியாது. தந்தை கண்ட அகிம்சை வழியில் சென்று அவர் பேணிக்காத்த இலட்சியத்தை அடையவேண்டும்.

தந்தையின் மறைவினால் துயருறும் தமிழ் நெஞ்சங்களே என் சார்பிலும் அ. இ. அ. தி. மு. கழகப் பொதுச் செயலாளர் ''பொன் மனச் செம்மல்'' சார்பிலும் செலுத்தும் அஞ்சலியை ஏற்றுக்கொள்ளுங்கள்.

FROM THE LONDON TIMES OF THURSDAY APRIL 28 1977

MR. S. J. V. CHELVANAYAKAM LEADER OF SRI LANKAN TAMILS.

Mr.Samuel James Velupillai Chelvanayakam, Q,C., President of the Tamil United Liberation Front, who died in Jaffna on April 26 at the age of 79, commanded a wider following among the Sri Lanka Tamils than any other Tamil politician of the post-independence period.

Slim, frail ascetic, he was a Christian (most Tamils are Hindus,) but his sincerity, integrity and single-minded devotion to the cause of the Sri Lanka Tamils won him acceptance as the leader of the Tamils and the respect and admiration of the other communities in the Island. Mr. Chelvanayakam was born in Malaya where his father was a business man. He was brought to Ceylon as a child by his mother and he was educated at St. Thomas College Colombo, where the late Premier Mr. Bandaranaike was a contemporary.

After a short period as a teacher he qualified as a lawyer and took silk in 1947. He became deputy leader of the Tamil Congress and formed the Federal Party of which he was elected leader in 1949 after the Indian Tamils in Ceylon were excluded from citizenship by two Citizenship Acts. He and several members of his party were defeated in the general elections of 1952. But they emerged as the biggest group in the elections of 1956. When Mr. Bandaranaike's Freedom Party won a landslide victory in the Sinhalese Districts. Mr. Bandaranaike and Mr. Chelvanayakam signed a pact settling all matters in dispute between the two communities in 1957. But extremists in Mr. Bandaranaike's party forced him to unilaterally abrogate the pact and there were disastrous communal riots in the following year. In 1961, the Federal Party launched a satyagraha (non-violent) campaign against the government of Mrs. Bandaranaike, now Premier after her husband's death, and in 1972, launched Campaign for a separate Stae. Mr. Chelvanayagam resigned his seat as a token gesture and was re-elected with an overwhelming majority.

In February this year he began discussions with Mrs. Bandaranaike which if they had been succesfully conculuded would have led to the dropping of the Tamil demand for a separate state. But discussions had to be suspended when Mr.Chelvanayakam fell ill last month. Mr. Chelvanayakam acted as a sobering and restraining influence on the Tamils and this is likely to be remembered as his greatest service to his country in the first three decades of this Island's history after independence.

NOBILITY OF CHARACTER:

On behalf of Sarvodaya Sramadana Movement please accept our heartfelt condolence on your bereavement. The nobility of the great leader's character will be a shining example for our generation.

—*A. T. Ariyaratne*
President, Sarvodaya

ஆணையை எதிர்பார்த்தோம் கட்டளை வழங்காமல் பிரிந்துவிட்டார்

மலையகத் தமிழர் சார்பில்
எம். எஸ். செல்லச்சாமி

தமிழ் மக்களின் மூச்சை இழந்து தவிக்கின்றோம். தமிழ்பேசும் மக்களுக்கு மட்டுமன்றிச் சகல மக்களுக்கும் வழிகாட்டியாக விளங்கினர் தந்தை செல்வா.

மலையகம், மட்டுநகர், திருமலை மக்களை ஒன்றுதிரட்டி 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களுக்கு அவர் ஒரு லட்சியப் பாதையைக் காட்டினர்.

நடப்பதற்கே சத்தியற்ற அவர், பேசுவதற்கே முடியாமல் திண்டாடும் ஒரு மெலிந்த உருவம் ஆணையிட்டால் அதனை நிறைவேற்ற இலட்சக்கணக்கான மக்கள் தயாராக இருந்தனர். சிறை செல்லவோ தூக்குமேடை செல்லவோ துப்பாக்கியை எதிர்நோக்கவோ இலட்சக்கணக்கான இளைஞர்கள் அவர் கட்டளையை எதிர்பார்த்து நின்றனர். அவர் கட்டளையை வழங்காமலே பிரிந்து விட்டார்.

தந்தை சொல் மந்திரம்

தலைவர்கள் மறையலாம் — இலட்சியம் மறையாது!

ஓர் இயக்கத்தின் தலைவர்களாக விளங்குபவர்கள் ஒரு கால கட்டத்தில் கொள்கை பிறழ்ந்தோ அல்லது இறப்பினுல் மறைந்தோ, அரசியலைத் துறந்தோ போகலாம். ஆனுல், அந்த விடுதலை இயக்கம் தடைப்பட வேண்டும் என்ற நியதி கிடையாது. தமிழ் அரசுத் தலைவர்கள் மாறலாம்; மறையலாம். ஆனுல், தமிழ் அரசு இயக்கம் தன் புனித இலட்சியங்களுக்கான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கந்தரோடையில், (சுதந்திரன்) 1960மார்ச் 6

சரணடையப் போவதில்லை

நாங்கள் சரணடையப் போவதில்லை. கடைசிவரை போராடுவோம்.......... நமது கோரிக்கை நீதியானதென்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். இதில் நாம் விட்டுக் கொடுத்தால் நாம் போராடத் தொடங்கு முன்னரே தோல்வி உற்றவர்களாவோம்.

கொழும்பில், 1956 மே. 20

FROM MALAYSIA AND LONDON

HIS ANSWER TO MY QUESTION: My wife and I send you and the members of your family our deepest condolences on the passing of our great leader and friend Mr. Chelvanayakam. The news was carried by the newspapers here in Malaysia on Thursday and Friday last. Earlier, about two weeks ago, we heard that he was seriously ill at the Jaffna hospital fighting between life and death. Some good friend was good enough to send me an issue of "Suthanthiran"which fully carried the news of his illness and that so many thousands were praying for his life. The paper said that every temple and church in Jaffna was offering special prayers for Mr. Chelvanayakam and that the hospital grounds were full of people some of whom were stationed there for nights and days. This is not surprising because we know the devotion and commitment people had in him.

"I remember the time when I was Pastor in Colombo when on several occasions I had the opportunity of having short chats with Mr. Chelvanayakam. One occasion when the UNP came into political power and was wooing the Federal Party's support I talked with him and I still remember his answer to my question, "What is going to be the future of the Party if you don't join". He said in Tamil quoting from the Hymn, "There is a land that is fairer than day"

—Rev. J. J. Ratnarajah, Selangor, Malaysia.
(in a letter to Mrs. Chelvanayakam)

The meeting of Tamil citizens and others decendants of Sri Lanka held today at Selangor Ceylon Tamils Association Hall, Kuala Lampur expressed their great shock at the passing away of our leader Chelvanayakam and resolved to send their deepest sympathy to the bereaved family.

—S. T. Thambynayagam, Chairman

We grieve with you the loss of your husband and dedicate ourselves to achieve the objective our late leader fought for.

—Eelam Tamil Association, London

"ABSOLUTE INTEGRITY": "My sincerest sympathies on the loss of a great leader. His absolute integrity, simplicity, and sincerity of purpose is an example to all of us"

—B. S. C. Ratwatte, Judge of the Supreme Court

"WORDS CANNOT EXPRESS": Words cannot express the loss suffered by all of us at the demise of the greatest leader of the Tamils

—V. Manickavasagar, Former Judge of the Supreme Court.

Tamils have been orphaned. We are sheeps without shepherd. Providence alone can save us.

—Mr. Mrs. H. D. Thambiah

Deeply grieved irreparable loss of most loved dedicated leader please accept our heartfelt condolences and convey to family members.

—Mr. Mrs. C. Renganathan

தலைவர்களின் இறுதி அஞ்சலி

டாக்டர் கலீல்

தமிழ் பேசும் மக்கள் உரிமையுடன் வாழும் நிலைகாண நாம் உழைப்பதே அன்னாருக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகும். கடந்த ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற செல்வாவினுடைய பிறந்த நாள் விழாவில் அவரை வாழ்த்திப் பேசுகின்ற வாய்ப்பு, எனக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

டாக்டர் என். எம். பெரேரா

இந்த நாட்டு மக்களுக்கு இன்று ஒரு துயர நாள். அமரர் செல்வநாயகம் தனிமனிதனை மட்டும் காட்சிதரவில்லை. இந்தச் சகாப்தத்தில் ஒரு யுகத்தையே உருவாக்கிய தலைவர் அவர். திடமான மனமும் மாசுமறுவற்ற உள்ளமும், சந்தேகப்படமுடியாத நேர்மையும் செல்வநாயகத்திடம் நிறைந்திருந்தன. அவர் தமக்குச் சரியென்று பட்ட கொள்கைக்காகத் தம்மையே அர்ப்பணித்தார். தமது சமுதாயத்திற்காகவே வாழ்ந்தார். அவர் இழப்பு தமிழர்களுக்கு மட்டுமன்றி நாடு முழுவதற்குமே பேரிழப்பாகும்.

திரு. ஆர். பிரேமதாசா

மூதறிஞர் செல்வநாயகத்தைப்போலப் பிறப்பவர்கள் மிகவும் அரிதாகவே பிறக்கிறார்கள். உயர்ந்த குணமும், உந்நத பண்பாடும் கொண்ட நிறைந்த தலைவர் அவர். இந்த நாட்டில் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ்வதை வெறுத்தார். எந்தவொரு சமூகமும் இரண்டாந்தரப் பிரஜைகளாக நசுக்கப்படுவதை எவரும் விரும்பமாட்டார்கள். நேர்மை வழிநின்று சமூகத்திற்காகவும் நாட்டிற்காகவும் உழைத்த செல்வநாயகத்தின் பெயர் என்றும் நின்று நிலைக்கும்.

பிஷப் விக்கிரமசிங்க

மூதறிஞர் செல்வா இந்நாடு முழுவதற்கும் சொந்தமானவர். செல்வநாயகம் தமது வாழ்வில்—சொந்த வாழ்விலும் சரி அசிரயல் வாழ்விலும் சரி—நேர்மை ஒன்றையே கடைப்பிடித்தார். இதுவே அனைவரையும் இவர்பால் ஈர்க்க வைத்தது. அரசியலில் அவர் ஒரு நடிகராகவோ ஏமாற்றுப் பேர்வழியாகவோ சந்தர்ப்பவாதியாகவோ அல்லது ஒரு சர்வாதிகாரியாகவோ என்றைக்கும் நடந்ததில்லை. அவர் எப்பொழுதும் மனச்சாட்சிக்கே முக்கிய இடம் கொடுத்து வந்தார். ஓர் இனம் வாழ்வதற்கு அதற்கென ஒரு நிலம் வேண்டும் என்பதை உணர்ந்து தமிழ் மக்களின் தாயகத்திற்காகவும், அவர்களின் மொழி, கலாசார, பொருளாதார மேம்பாட்டிற்காகவும் இறுதிவரை உழைத்தார்.

தந்தை சொல் மந்திரம்

பிரிந்து செல்வது பிறப்புரிமை

இலங்கைக்குச் சுதந்திரம் வேண்டுமென்று கேட்கப்படும் போது அதே சுதந்திர உரிமை தமிழ் மக்களுக்கு மறுக்கப்படுவதற்கு நியாயம் இல்லை. இலங்கையின் ஏனைய பாகங்களில் இருந்து பிரிந்து செல்லும் உரிமை தமிழ் மக்களுக்கு வேண்டும்.

— பாராளுமன்றத்தில், 1947 நவம்பர் 28

மொழியும் பண்பாடும் காக்க பிரிவினை வேண்டும்

வடக்குக் கிழக்கு மகாணங்களை நாட்டின் இதர பகுதிகளில் இருந்து பிரிக்க வேண்டும் என்பதை உரிமையுடனேயே கோருகின்றோம்.

சிறுபான்மையினர் தங்கள் மொழி, கலாசாரம் பறிபோய்விடுமென்ற பீதி இன்றி வாழ வேண்டும் என்பதே இதன் முக்கிய நோக்கம்.

—பாராளுமன்றத்தில், 1956 யூலை 29

தாயகம் காண்போம்

ஓர் இனம் வாழ அதற்குரியதென்று ஒரு பிரதேசம் வேண்டும். தன்னுடைய தனித்தன்மையுடன் நாட்டின் தேசிய இனமாகத் தலையெடுத்திருப்பதற்குப் பிரதேசம் அல்லது தாயகம் இல்லாமல் முடியாது. உறைவிடம் அவசியம் வேண்டும். தமிழினத்தைப் பொறுத்த மட்டில் அதற்குத் தாயகம் உண்டு. வட, கிழக்கு மாகாணங்கள் பரம்பரையாகவே தமிழ்ப் பிரதேசங்கள்.

—கொழும்பு, இலங்கைப் பல்கலைக்கழகத்தில், 1960 ஜனவரி

சலுகைகளால் நிறைவு பெறோம்

நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் சில உத்தியோகத்தர்களைக் கொண்டும், கிராம ஆஸ்பத்திரிகளைக் கொண்டும் நாம் திருப்தி அடைந்து விடக்கூடாது. வருகின்ற தலைமுறைக்கும் சேவை புரிவதே நமது இலட்சியம்........... நாங்கள் அதிக சக்தியுடன் தொடர்ந்து போராட உறுதியுடன் இருக்கின்றோம். நீங்கள் ஒவ்வொரு வரும் எங்கள் கட்சிக்கு உதவ வேண்டும். அப்படி உங்களால் இயலாவிட்டால் எங்கள் பாதையில் தடங்கல் விளைவிக்காதீர்கள்.

—கைதடியில், 1950 செப். 27

தந்தை சொல் மந்திரம்

முதலும் முடிவும் போராட்டமே

அடுத்த நடவடிக்கை என்ற சொற்பிரயோகத்திற்கே இடமில்லை. கட்சியின் ஓரே நடவடிக்கை தமிழ் பேசும் மக்கள் இழந்த உரிமைகளை மீண்டும்......... அடையும் வரை தளராது போராடுவதுதான். முதல் நடவடிக்கையும் அதுதான். அடுத்த நடவடிக்கையும் அதுதான். முடிவான நடவடிக்கையும் அதுவேதான். அதாவது போராட்டம். தலைவர்களின் சிந்தனையில் போராட்டங்கள் ஆராயப் பட்டுக் கொண்டே இருக்கின்றன. எந்த நேரத்திலும் போர் முரசு முழங்கலாம். அந்த நேரம் கணப்பொழுதில் அணிவகுக்கத் தொண்டர்களும் வீரர்களும் தமிழ்ப் பொது மக்களும் பயிற்சியும் எழுச்சியும் பெற்றவர்களாக வேண்டும்.

—சுதந்திரன், 1959 பெப்ருவரி 15

தனியரசு பெற ஐ. நா. செல்வோம்

தமிழருக்குத் தனியரசு வேண்டும். காஷ்மீர், ஐதரபாத்தில் பொதுசன வாக்கு எடுப்பது போல் தமிழர் உள்ள இடங்களிலும் பொதுசன வாக்கு எடுக்க வேண்டும். இந்த இலட்சியம் கைகூடுவதற்காக ஐ. நா. சபைக்குக்கூட விண் ணப்பஞ் செய்ய முடியும். இது தமிழருடைய சுயநிர்ணய உரிமை. தமிழர்கள் தங்கள் உரிமைக்காக எத்தனை தலைமுறை போராடினாலும் பாதகம் இல்லை.

— ஆவரங்காலில், 1949 மார்ச் 05

விடுதலை நெருங்கி வருகிறது

தமிழ் பேசும் இனத்தின் விடுதலையைக் குறித்துத் தமிழ் மக்கள் கவலைப் படத் தேவையில்லை. தமிழினத்தின் விடுதலை மிகமிக அண்மையில்தான் இருக்கிறது.

—கற்குடாவில், 1959 பிறந்தநாள் விழாவில்.

இலட்சிய வீரரைத் தாரீர்

பொதுத்தேர்தல் முடிந்ததும் நாம் சும்மா இருக்கப் போவதில்லை. பார்லிமெண்டுக்கு உள்ளேயும் வெளியிலும் தமிழினத்தின் உரிமைகளைப் பெறுவ தற்காகத் தொடர்ந்து தீவிரமாய்ப் போராடுவோம். அதற்காக என்னுடன் தோளோடு தோள் சேர்ந்து நின்று உழைக்கக்கூடிய இலட்சிய புருஷர்களை எதிர்வரும் தேர்தல் மூலம் தந்துதவுமாறு பொது மக்களைக் கேட்டுக் கொள் கின்றேன்.

—வீரகேசரி, 1960 பெப்ரவரி 27.

MOST CONSISTENT POLITICIAN

"Mr. Chelvanayakam, unlike many other prominent men has been one of the most consistent and single minded of politicians this country has produced. Never has he trimmed his sails to the wind of opportunism. Never has he jumped to the crack of a master's whip. His sincerity has never been challenged even by his bitterest political opponents."

—*Morning Times*—27-7-1957

தந்தை சொல் மந்திரம்

எதிர்ப்பு எதிர்ப்பு. இறுதிவரை எதிர்ப்பு.

நாம் எங்கள் நல்வாழ்வுக்காக எதைச் செய்தாலும் சிங்கள மக்கள் ஆத்திரம் அடைவார்களே என்று சும்மா இருந்தால் எமது இனம் பூண்டோடு அழிந்து விட வேண்டியதுதான். உரிமைகள் தாமாக வரா. விடுதலை நம்மைத் தேடி வராது. நாம் அதை நாடிப் போக வேண்டும். அதற்காகப் பாடுபட வேண்டும். இன்றைய நிலையில் சிங்கள அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு மீண்டும் மீண்டும் தீமையே செய்து கொண்டு வருகின்றது. அதனால் தமிழ் பேசும் இனம் அரசாங்கத்திற்குத் தன் எதிர்ப்பைத் துலாம்பரமாகக் காட்ட வேண்டும். தொடர்ந்து காட்டியாக வேண்டும். விடாப்பிடியாகக் காட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

—கொழும்பு, இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தில்,
(சுதந்திரன்) 1960 ஜனவரி 31.

சுதந்திரத் தமிழரசு உதயமாவது உறுதி

சுதந்திரத் தமிழரசு ஒன்று உதயமாவதை உலகில் எந்தச் சக்தியாலும் தடுத்துவிட முடியாது.

—மட்டுநகரில், 1958 ஏப்ரல் 15

தந்தை செல்வாவின்
இறுதி ஆணை

தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாம் ஒருகாலத்தில் இணைப்பாட்சி இயக்கத்தைத் தொடக்கிவைத்தோம். ஆனல் இணைப்பாட்சி மூலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவது முடியாததாய் விட்டது. கடந்தகால அனுபவங்களின் வாயிலாக இதனை அறிந்துவிட்டோம்.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் தனியே பிரிந்து வாழ வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். இதை நாம் செய்யாவிட்டால் தமிழினம் தனது இழந்த உரிமைகளை ஒருபோதும் மீட்டுக்கொள்ள முடியாது.

எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தார்கள். அவர்கள் தங்களுக்கெனத் தனியாட்சியை வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் எங்களுக்கென ஓர் இடம் இருந்திருக்கிறது. எங்கள் இயக்கம் நாட்டைப் பிரிக்கும்படி கோரவில்லை. இழந்த எங்கள் உரிமையான தமிழ் அரசை மீள அமைக்கவேண்டும் என்பதே எங்கள் நிலையாகும்.

தனித் தமிழ் ஈழத்தை நிறுவும் இலட்சியத்தை நோக்கி எங்கள் இயக்கம் முன்னேறுகின்றது. தனித் தமிழ் ஈழம் நிறுவுவது எளிதான காரியமல்ல என்பதும், மிகவும் வில்லங்கமானது என்பதும் எங்களுக்குத் தெரியும். ஆனல், நாம் ஒன்றில் சிங்களவரின் அதிகாரத்திற்குள் இருந்து விடுபட்டு வெளியேற வேண்டும். அல்லது அழிந்துபோகவேண்டும். இது உறுதியானது. எனவே, நாங்கள் போராடித் தனித் தமிழ் ஈழத்தை நிறுவியே தீருவோம்!

நாங்கள் இணைப்பாட்சிக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டோம். எங்கள் தனி நாட்டுக்கான இயக்கம் அறவழி அடிப்படையிலேயே நடைபெறும்.

பாராளுமன்றத்தில், 1976—11—19.

Presented to the Evelyn Rutnam
Institute of Research

R. Rajasekaran
10-5-1983

வெளியிடுவோர்: தந்தை செல்வா அறங்காவற் குழு,
(20, கனன் சோமசுந்தரம் வழி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.)
1980 ஏப்பிரல் 26

தலைவர்	......	கு. நேசையா
துணைத்தலைவர்	.....	அ. அமிர்தலிங்கம், பா. உ.
		மு. சிவசிதம்பரம், பா. உ.
பொருளாளர்	......	சி. கதிரவேலுப்பிள்ளை, பா. உ.
உறுப்பினர்கள்	......	சா. செ. சந்திரகாசன்
		சு. நடராசா
செயலாளர்	......	வி. தர்மலிங்கம், பா. உ.
(1979 ஓகத்து வரை	.....	க. சச்சிதானந்தம்)
இணைச் செயலாளர்	......	மா. க. கனகேந்திரன் (ஈழவேந்தன்)
பதிப்பகம்	......	புனித வளன் கத்தோலிக்க அச்சகம்,
		யாழ்ப்பாணம்.

விலை : ரூபா 2-00

Published by Thanthai Chelva Memorial Trust, 26 April 1980
(20, Canon Somasunderam Avenue, Jaffna, Sri Lanka)

Chairman: K. Nesiah
Vice-Chairmen: A. Amirthalingam, M. P., M. Sivasithamparam M. P.
Treasurer: S. Kathiravelupillai, M. P.
Other members: S. C. Chandrahasan, S. Nadarajah
Secretary: V. Dharmalingam, M.P.
(K. Satchithanantham till August 1979)
Associate Secretary: M. K. Kanagendran (Eelaventhan)

Printed at St. Joseph's Catholic Press, Jaffna.

Price: Rs. 2/-

LEARN TO SAY 'NO'

A Nation does not need the dagger of the assassin, it does not need the poison bowl, it does not need the sword, the spear or the bullet. It needs simply a will of its own an ability to say 'NO' and that Nation is today learning to say 'NO'.

—*MAHATMA GANDHI*